நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

## தரம் : உயர்நிலை

## Level : Advanced

***December 2011***

வினாக்கள் : 60

வழங்கப்படும் நேரம் : 70 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்யவும்.**

ஈழத் தமிழர்களது கலாசாரத் தலைநகரம் என அறியப்பட்ட யாழ்ப்பாணம் இன்று மாறிக்கொண்டிருக்கிறது. பொருளாதார அபிவிருத்தியினை நோக்கி அது உறுதியுடன் பயணித்தாலும் தமிழர்களின் தனித்துவ அடையாளங்களை இழந்து போய்விடுவோமோ என்ற அச்சத்தையும் அது ஏற்படுத்துகின்றது. குடாநாட்டில் இருப்பவர்களைவிட நீண்ட நாள்களின் பின்னர் யாழ்ப்பாணத்திற்குச் செல்பவர்கள் இந்த மாற்றத்தை இலகுவில் உணர்ந்துகொள்கிறார்கள்.

இதுநாள் வரைக்கும் நாட்டின் தென் பகுதிகளில் மாத்திரம் இருந்த தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்கள் என்பன குடாநாட்டின் பல பாகங்களிலும் தங்களது கிளைகளைத் திறந்துவருகின்றன. இந்த வங்கிகளின் குறி அங்கு குவிந்திருக்கும் தங்க நகைகள் மீதும், பணத்தின்மீதும் இருக்கிறது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. குடாநாட்டில் களவுகள் அதிகரித்துவிட்டமையால் தங்களது நகைகள் மற்றும் பணத்தை வங்கிகளில் பத்திரப்படுத்தவே மக்கள் விரும்புகிறார்கள். மிகச்சிறிய அளவில் இந்த வங்கிகள் தொழில் முயற்சிகளுக்கான கடன்திட்டங்களையும் முன்னெடுத்து வருவது இங்கு குறிப்பிட்டத்தக்கது.

குடாநாட்டில் மொத்தமாக உள்ள பெண்களில் விதவைகள் மற்றும் அங்கவீனமடைந்தவர்கள் 46 சதவீதம் என இலங்கை சமூகசேவைகள் அமைச்சு தகவல் சொல்கிறது. பிற மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது இந்த எண்ணிக்கை மிகவும் அதிகம். குடாநாட்டில் மாத்திரம் 26300 யுத்த விதவைகள் இருக்கிறார்கள். பெரும்பாலும் பெண்களைக் குடும்பத் தலைமையாகக் கொண்ட இந்தக் குடும்பங்கள் தமக்கான தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சுயதொழில் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது.

வேலையில்லாப் பிரச்சினை, வேலைக்கேற்ற ஊதியம் கிடைக்காமை, சுதந்திரமான நடமாட்டம் எனப் பல பிரச்சினைகள் இன்னமும் குடாநாட்டில் இருக்கத்தான் செய்கின்றன. பலநூறு பட்டதாரிகள் இன்றும் வேலையின்றி இருக்கின்றனர். சமூகச் சீர்கேடுகள் பெரிதாக வெளியே தெரிவதில்லை என்றாலும், இவை தற்போது அதிகம் காணப்படுகின்றன. இளம் தலைமுறை பெரிதும் மாறிவிட்டது என ஒரு கல்விமான் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார். மேற்கத்தேய உடையணிந்த உள்ளூர் பெண்களை நகர வீதிகளில் தற்போது அதிகம் காணமுடிகிறது. குடாநாட்டில் இளம் வயதினர் தற்கொலை முயற்சியில் ஈடுபடும் சம்பவங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன. போர் இழப்புக்களால் ஏற்பட்ட மன அழுத்தமும் இதற்கொரு காரணம். குடாநாடு பெரிதும் மாறி விட்டது. இந்த மாற்றங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடுகின்றன எனச் சிலர் வாதிடுகிறார்கள். ஆனால், கலாசார ரீதியிலான அதன் தனித்துவத்தை யாழ்ப்பாணம் மெல்ல மெல்ல இழந்து வருகிறது என்பதுதான் உண்மை.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

## வினாக்கள் 1-10 : பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. தமிழர்களின் தனித்துவ அடையாளங்கள் என்பது:

   (a) மொழியும் பண்பாடும்
   (b) உணவு, உடை மற்றும் பழக்கவழக்கங்கள்
   (c) இசையும் கலைகளும்
   (d) இவை எல்லாம்.

2. குடாநாட்டில் இருப்பவர்களைவிட நீண்ட நாள்களின் பின்னர் யாழ்ப்பாணத்திற்குச் செல்பவர்கள் இந்த மாற்றத்தை இலகுவில் உணர்ந்துகொள்கிறார்கள். இதன்படி சரியான கூற்று:

   (a) குடாநாட்டில் இருப்பவர்கள் மாற்றத்தை உணர்ந்துகொள்ளவில்லை.
   (b) யாழ்ப்பாணத்திற்கு அடிக்கடி செல்பவர்கள் மாற்றங்களை உணர்ந்துள்ளனர்.
   (c) நீண்ட நாட்களின்பின் செல்பவர்கள் மாற்றத்தை உணர்ந்து கொள்கின்றனர்.
   (d) இவை எதுவும் அல்ல.

3. வடக்கிற்கு வந்துள்ள வங்கிகளின் முக்கிய நோக்கம்:

   (a) மக்கள் சேவை
   (b) மக்களின் முதலீடுகளும் வைப்புகளும்
   (c) நகைகளின் பாதுகாப்பு
   (d) இவை எல்லாமே.

4. யாழ்ப்பாண மக்கள் வங்கிகளை நாடுவதின் முக்கிய நோக்கம்:

   (a) வங்கிகளின் மக்கள் சேவையின் மகத்துவம்
   (b) களவுகளிலிருந்து தம் நகைகளைப் பாதுகாக்க
   (c) தமது பணத்தை முதலீடு செய்து இலாபம் அடைய
   (d) தொழில் முயற்சிகளுக்கு இலகுவாகக் கடன் பெற்றுக்கொள்ள

5. பின்வரும் கூற்றுகளில் மிகச்சரியானது.

   (a) குடாநாட்டில் விதவைகள் மற்றும் அங்கவீனமடைந்தவர்கள் தொகை இருபத்தாறாயிரத்திற்கும் அதிகமானது.
   (b) இலங்கையின் மொத்த பெண்கள் தொகையில் 45 வீதமானோர் குடாநாட்டில் உள்ளனர்.
   (c) குடாநாட்டில் உள்ள பெண்களில் 45 வீதமானோர் விதவைகளும் அங்கவீனமடைந்தோரும் ஆவர்.
   (d) போரினால் தமது கணவனை இழந்த தமிழ்ப் பெண்களின் தொகை 26300.

6. பின்வரும் கூற்றுகளில் தவறானது:

   (a) குடாநாட்டில் மக்களின் சுதந்திர நடமாட்டத்திற்கு தடைகள் எதுவுமில்லை
   (b) குடாநாட்டில் வேலையில்லாப் பிரச்சனை மிக முக்கியமானது.
   (c) குடாநாட்டில் பெரும்பாலும் வேலைக்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை.
   (d) பல நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் வேலையின்றி இருக்கின்றனர்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

7. இளம் தலைமுறையினர் பெரிதும் மாறிவிட்டனர் என கல்வியாளர் ஒருவர் கருதுவதற்குக் காரணம்:

(a) அதிக பட்டதாரிகள் இருக்கின்றனர்
(b) இளவயதினர் அதிகம் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.
(c) இளம்பெண்கள் மேலைதேய உடையணிந்து நகரில் உலவுவது அதிகரித்துள்ளது.
(d) இள வயதினர் அதிகம் தற்கொலை செய்கின்றனர்.

8. சமூகச் சீர்கேடுகள் என்பதன் பொருள்:

(a) சமூகதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்கங்களை மீறுவது.
(b) சட்டத்தை மீறுவது
(c) சமூகத்தைப் பற்றி அதிகம் அலட்டிக்கொள்வது
(d) இவை எல்லாமே.

9. இளையவயதினரிடையே தற்கொலைகள் தொடர்பான மிகச்சரியான கூற்று:

(a) வேலையில்லாப் பிரச்சனையால் தற்கொலைகள் அதிகரித்துள்ளன.
(b) விதவைகள் தற்கொலை செய்வது அதிகரித்துள்ளது.
(c) போர் இழப்புகளால் ஏற்பட்ட மன அழுத்தமும் ஒரு காரணம்.
(d) இவை எதுவுமல்ல.

10. இவ்வுரைப்பகுதியின் முக்கிய நோக்கம்:

(a) யாழ்ப்பணத்தின் அபிவிருத்தியை வெளிக்காட்டுவதற்கு.
(b) இளம் பெண்களின் நாகரீக மோகத்தைக் காட்டுவதற்கு
(c) மக்கள் மெல்ல மெல்ல மாறிவருகின்றனர் என்று கூறுவதற்கு
(d) இவை எதுவுமல்ல.

**வினாக்கள்: 11-15: பின்வரும் பாடல்வரிகளையும் அவற்றின் ஆசிரியர்களையும் தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| (a) இளங்கோ அடிகள் | (b) கணியன் பூங்குன்றனார் |
| (c) பாரதிதாசன் | (d) மனோன்மணியம் சுந்தரனார் |

11. நீராறும் கடலுடுத்த நிலமடைந்தைக் கெழிலொழுகும்
சீராறும் வதனமெனத் திகழ் பரதக் கண்டமதில்

12. யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தரவாரா

13. திங்கள் மாலை வெண்குடையாள் சென்னி செங்கோல் அது ஓச்சி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி

14. தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத்
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்.

15. வாயிலோயே வாயிலோயே
அறிவுஅறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே!

**வினாக்கள்: 16-20: பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

16. சிட்னியில் இருந்து வெளிவராத சஞ்சிகை.
    (a) தென்றல்
    (b) காலச்சுவடு
    (c) தமிழருவி
    (d) தமிழ் ஓசை

17. தமிழர் தன்மானத்தோடு வாழவேண்டும் என எங்கும் பிரச்சாரம் செய்துவரும் கவிஞர்.
    (a) கண்ணதாசன்
    (b) வைரமுத்து
    (c) வாலி
    (d) தாமரை

18. புதுடெல்லி காமன்வெல்த் போட்டிகளில் தங்கம் வென்ற அவுஸ்திரேலிய தமிழ் வீரர்
    (a) முத்தையா முரளீதரன்
    (b) பிரசாந்த் செல்லத்துரை
    (c) இவர்கள் இருவரும்
    (d) எவருமில்லை

19. வ.உ.சிதம்பரனார் கதைகூறும் புகழ்பெற்ற திரைப்படம்
    (a) கப்பலோட்டிய தமிழன்
    (b) எந்திரன்
    (c) இந்தியன்
    (d) இவை எல்லாமே.

20. அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் வாராந்த இணையச் சஞ்சிகை
    (a) விகடன்.கொம்
    (b) தமிழ் முரசு
    (c) ஆறாம் திணை
    (d) தீரா நதி

**வினாக்கள்: 21-25: பின்வரும் நூல்களுக்குப் பொருத்தமான ஆசிரியரைத் தெரிவுசெய்க.**

| | |
|---|---|
| (a) அடேல் பாலசிங்கம் | (b) மாத்தளை சோமு |
| (c) சந்திரலேகா வாமதேவா | (d) வித்துவான் வேந்தனார் |

21. சுழலும் தமிழ் உலகம் கட்டுரைத் தொகுப்பு

22. சுதந்திர வேட்கை என்ற மொழிபெயர்ப்பு நூலின் மூலம்.

23. தன்னேரிலாத தமிழ் கட்டுரைத் தொகுப்பு

24. கவிதைப் பூம்பொழில் கவிதைத் தொகுப்பு

25. வியத்தகு தமிழர் அறிவியல்

**வினாக்கள்: 26-28: பின்வரும் ஆங்கிலப்பதங்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களைத் தேர்வு செய்க.**

26. Entrepreneur
27. Autonomy
28. Perseverance

(a) தன்னாட்சி
(b) விடாமுயற்சி
(c) தொழில்முனைவோர்
(d) சுதந்திரம்

**வினாக்கள்: 29-30: பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தேர்வு செய்க.**

29. தமிழ் எழுத்துகள் எத்தனை வகைப்படும்?

(a) முப்பது
(b) நான்கு
(c) பன்னிரண்டு
(d) பதினெட்டு

30. பின்வருவனவற்றுள் மெல்லினம் எனக் கூறத்தக்கவை:

(a) க் ச் ட் த் ப் ற்
(b) ய் ர் ல் வ் ழ் ள்
(c) ங் ஞ் ண் ந் ம் ன்
(d) க் ப் ந் ன் ற் வ்

**வினாக்கள்: 31-35 : பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. சிட்னியிலுள்ள தமிழ்ப் பேராசிரியர்

(a) பூலோகசிங்கம்
(b) கந்தராஜா
(c) அம்பிகைராஜா
(d) இவர்கள் எல்லோரும்

32. தமிழ் நகைச்சுவை நாடகங்களை எழுதும் வைத்திய நிபுணர்

(a) மனமோகன்
(b) ஜெயமோகன்
(c) அருள்மோகன்
(d) எவருமல்ல

33. வானொலி நிகழ்ச்சிகள் தயாரிக்கும் குழந்தைக் கவிஞர்

(a) மகேசன் மாமா
(b) கவிஞர் அம்பி
(c) சேரன்
(d) இவர்கள் எல்லோரும்

34. யாழ்.நூலகம் எரியூட்டப்பட்டதை வருடந்தோறும் நினைவுகூர்ந்து கொடிவாரவிழா நடத்துபவர்கள்

(a) சிட்னி தமிழ் மன்றம்
(b) அவுஸ்திரேலிய தமிழ் மன்றம்
(c) சிட்னி தமிழ் அறிவகம்
(d) ஈழத்தமிழர் கழகம்

35. அண்மையில் சிட்னிக்கு வருகைதந்த தமிழ்நாட்டு அறிஞர்

(a) சாலமன் பாப்பையா
(b) சுகி சிவம்
(c) இளசை சுந்தரம்
(d) வைரமுத்து

## வினாக்கள்: 36-40 பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

36. ஐவகை நிலங்களுள் காடும் காடு சார்ந்த இடமும் இதுவாகும்.

(a) குறிஞ்சி
(b) முல்லை
(c) மருதம்
(d) நெய்தல்

37. சங்கமருவிய காலத்து நூல்கள்

(a) எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்
(b) வளையாபதியும் குண்டலகேசியும்
(c) கம்பராமாயணமும் திவ்வியபிரபந்தமும்
(d) சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

38. தமிழில் முதல் நாவலை எழுதியவர்

(a) ல.ச. ராமாமிர்தம்
(b) வேதநாயகம்பிள்ளை
(c) தேசிகவிநாயகம்பிள்ளை
(d) மு. வரதராசனார்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

39. வசனநடை கைவந்த வல்லாளர் எனப் போற்றப்பட்டவர்

(a) ஆறுமுகநாவலர்
(b) வீரமாமுனிவர்
(c) சிவஞான முனிவர்
(d) பரிதிமாற்கலைஞர்

40. தஞ்சைப் பெரியகோவிலின் சிறப்புகளுக்குக் காரணம்

(a) ஆயிரம் ஆண்டு காலப் பழமையானது
(b) இராஜராஜ சோழனால் கட்டப்பட்டது.
(c) சிறப்பு வாய்ந்த கோபுரம் உடையது.
(d) இவை எல்லாமே.

**வினாக்கள்: 41-45 பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

| | |
|---|---|
| (a) தமிழ் மரபு அறக்கட்டளை | (b) தமிழ் விக்கிபீடியா |
| (c) தமிழ் இணையக் கல்விக்கழகம் | (d) லதா |

41. விண்டோஸ் இயங்குதளத்தில் கிடைக்கும் தமிழ் எழுத்துரு
42. பழந்தமிழ் ஓலைச்சுவடிகளின் பாதுகாப்பும் சேமிப்பும்
43. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொலைக்கல்விப் பிரிவு
44. இணையத்தில் தமிழ்க் கலைக்களஞ்சியம்
45. இணையத்தில் தமிழ் நூலகம்.

**வினாக்கள்: 46-50: பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை ஊகித்து விடைத்தாளில் குறிப்பிட்ட இலக்கத்திற்கு எதிரே எழுதுக.**

மதுரை இளைஞர் கிருஷ்ணன்... சி.என்.என். (CNN) தேர்ந்தெடுத்துள்ள உலகின் சிறந்த 10 மனிதர்களுள் ஒருவர். சமூக அக்கறை, நம்பிக்கை, விடா முயற்சி இவற்றை மட்டுமே மூலாதாரமாகக் கொண்டு இந்தப் பூமியில் மாற்றத்தைக் கொண்டு வர முனைந்து செயல்படுவோரைக் கண்டறிந்து, ஆண்டுதோறும் சிறந்த மனிதர்களை உலகுக்கு (46)______________________________காட்டி வரும் திட்டமே CNN Heros.

இதில், 2010 ஆம் ஆண்டுக்கான உலகின் சிறந்த 10 மனிதர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒரே தமிழர் கிருஷ்ணன். பெங்களூரில் நட்சத்திர விடுதியொன்றில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார் கிருஷ்ணன். சுவிஸ் நாட்டில் இருந்து வேலை கிடைக்க, அங்கு புறப்படும் முன் ஓய்வுக்காக சொந்த ஊருக்குப் போயிருக்கிறார். அந்த (47) ___________ ஓட்டு மொத்தமாக அவருடைய வாழ்க்கையையே மாற்றிப்போட்டுவிட்டது.

சும்மாதானே இருக்கிறேன் என்று சைக்கிளில் மதுரை ரயில் நிலையப் பக்கமாகப் போனேன். மேம்பாலத்தை ஒட்டி வீதியோரத்தில் அழுக்குத் துணிபோல அருவருக்கத்தக்க நிலையில் இருந்தார் அந்தப்பெரியவர். எனக்கு ஏதோ மாதிரி இருந்தது. உடனே அவரைச் சுத்தப்படுத்தி, உணவு விடுதியில் இருந்து இட்லி வாங்கி வந்து குடுத்தேன். அவர் கண்களில் நீர்கட்டி நின்றது. வீட்டுக்குத் திரும்பி வந்த நான், இந்த மனித வாழ்க்கையில இப்படியெல்லாம் கஷ்டங்கள் இருப்பதை நினைத்து அழுதேன். அதன்பின் எனக்கு சுவிட்சர்லாந்து பெரிதாகத் தெரியவில்லை" என்று படு இயல்பாகச் சொல்லி நம்மை (48)___________________ வைக்கிறார் கிருஷ்ணன்.

இன்றைக்கு மதுரை தெருக்களில் 120 பேருக்கு மூன்று வேளையும் வயிறார சாப்பாடு போட்டுக் கொண்டிருக்கிறார் கிருஷ்ணன். சாப்பாடு பரிமாறல் போக மீதி நேரங்களில் வீதிகளில் மனம்போன போக்கில் அழுக்காக திரியும் (49) ____________________ மாநகராட்சி குளியலறைக்குள் குளிக்கவைத்து அவர்களுக்கு மாற்றுத் துணி கொடுத்து 'பளீச்' ஆக்கிவிடுகிறார். கடந்த எட்டு ஆண்டுகளாக தனது 'அட்சயா' அறக்கட்டளை மூலம் தினமும் ஏறத்தாழ 400 பேருக்கு மூன்று வேளை உணவு அளித்து வருகிறார்.

அன்றாடம் காலை 4 மணிக்கே துவங்கிவிடுகிறது இவரது சேவைப் பயணம். கிருஷ்ணனின் அடுத்த (50) ____________________ வீதியில் வசிப்போருக்கு வசிக்க வீடு கட்டித் தருவதே. அதற்கான, செயல் திட்டங்களை வகுத்து தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகிறார் கிருஸ்ணன்.

## வினாக்கள் 51 - 60 : ஆக்கத்திறன் வினா

மேற்படி உரைப்பகுதியில் குறிப்பிடப்பட்ட கிருஸ்ணனை, அவரது மனிதநேயப் பணிகளுக்காகவும், உலகின் சிறந்த மனிதர்கள் பட்டியலில் முதல் பத்துப்பேர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டமைக்காகவும் வாழ்த்தி உமது பாடசாலை மாணவர் மன்றத்தின் சார்பில் 150 சொற்களில் கடிதம் ஒன்று வரைக. இளைய தமிழ் அவுஸ்திரேலியர்களுக்கு அவர் எப்படி முன்மாதிரியாக விளங்குகிறார் என்பதையும் அவரின் அறக்கட்டளைக்கு நீர் எவ்விதம் உதவலாம் என்பதையும் கடிதத்தில் உள்ளடக்குக.